**செய்தி வெளியீடு எண் : 543** **நாள் : 15.03.2023**

**செக் குடியரசின் தலைநகர் பிராக்கில் செக் குடியரசின் மண்டல மேம்பாட்டு அமைச்சகத்தின் துணை அமைச்சர், திரு. ஜான் ஃப்ளூக்சா அவர்கள் தலைமையிலான குழுவினரை மாண்புமிகு சுற்றுலாத்துறை அமைச்சர் திரு.கா.ராமச்சந்திரன் அவர்கள் நேரில் சந்தித்து தமிழ்நாட்டின் சுற்றுலா சிறப்புகள் குறித்த புத்தகங்களை வழங்கி, செக்குடியரசு சுற்றுலா பயணிகள் தமிழ்நாட்டில் சுற்றுலா மேற்கொள்ள அழைப்பு விடுத்தார்.**

ஜெர்மன் நாட்டின் தலைநகரான பெர்லின் நகரில் 7.03.2023 முதல் 9.03.2023 வரை நடைபெற்ற சர்வதேச சுற்றுலா சந்தையில் (INTERNATIONAL TRAVEL BOURSE–2023) மாண்புமிகு சுற்றுலாத்துறை அமைச்சர் திரு.கா.ராமச்சந்திரன் அவர்கள், சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை அரசு முதன்மைச் செயலாளர் டாக்டர். பி.சந்தரமோகன் இ.ஆ.ப., அவர்கள், சுற்றுலாத்துறை இயக்குநர் மற்றும் சுற்றுலா வளர்ச்சிக் கழக மேலாண்மை இயக்குநர் திரு.சந்தீப் நந்தூரி இ.ஆ.ப., அவர்கள் ஆகியோர் கலந்து கொண்டு, பல்வேறு நாடுகளைச் சேர்ந்த சுற்றுலாத்துறை அமைச்சர்கள், சுற்றுலா பயண ஏற்பாட்டாளர்கள், பார்வையாளர்களிடம் தமிழ்நாட்டின் சுற்றுலா சிறப்புகள் குறித்த புத்தகங்கள், மடிப்பேடுகளை வழங்கி தமிழ்நாட்டில் சுற்றுலா மேற்கொள்ள அழைப்பு விடுத்து கவனம் ஈர்த்தார்கள். இந்நிகழ்ச்சியையொட்டி நடைபெற்ற பசிபிக் பகுதி பயண எழுத்தாளர்கள் சங்க விருதுகள் வழங்கும் விழாவில் பாரம்பரிய சுற்றுலா இலக்கிற்கான பட்வா சர்வதேச பயண விருது தமிழ்நாட்டின் சுற்றுலாத்துறைக்கும், இந்திய அளவில் சிறந்த சுற்றுலா அமைச்சருக்கான பட்வா சர்வதேச பயண விருது மாண்புமிகு சுற்றுலாத்துறை அமைச்சர் திரு.கா.ராமச்சந்திரன் அவர்களுக்கும் வழங்கப்பட்டது.

தொடர்ந்து மாண்புமிகு சுற்றுலாத்துறை அமைச்சர் அவர்கள் தலைமையிலான குழுவினர் (13.03.2023) அன்று செக் குடியரசு நாட்டின் தலைநகரான பிராக்கில் செக் குடியரசின் மண்டல மேம்பாட்டு அமைச்சகத்தின் துணை அமைச்சர், திரு. ஜான் ஃப்ளூக்சா அவர்கள் தலைமையிலான குழுவினரை சந்தித்து தமிழ்நாட்டில் உள்ள சுற்றுலாத்தலங்களின் சிறப்புகள் குறித்து தெரிவித்ததுடன், அவற்றை உள்ளூர் செய்தி நிறுவனங்கள், சமூக வலைதளங்கள் மூலம் வெளியிடுவது குறித்த நடவடிக்கைகளை மேற்கொண்டார்கள். இந்நிகழ்வின்போது செக் குடியரசின் மண்டல மேம்பாட்டு அமைச்சகத்தின் துணை அமைச்சர், திரு. ஜான் ஃப்ளூக்சா அவர்கள் தலைமையிலான குழுவினருக்கு மாண்புமிகு சுற்றுலாத்துறை அமைச்சர் திரு.கா.ராமச்சந்திரன் அவர்கள் தமிழ்நாட்டில் சுற்றுலா சிறப்புகள் குறித்த விவரங்களை வண்ண புகைப்படங்களுடன் தெரிவிக்கும் புத்தகங்களை வழங்கினார்.

இந்த சந்திப்பின் போது செக்குடியரசின் சுற்றுலா ஏற்பாட்டாளர்கள், தமிழ்நாட்டின் சுற்றுலா பயண ஏற்பாட்டாளர்கள் மற்றும் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக்கழகத்தின் பயணத்திட்டங்கள், ஓட்டல் தமிழ்நாடு விடுதிகள் பயன்பாட்டில் வணிகரீதியாக இணைந்து செயல்படுதல், சுற்றுலா பயணிகளின் தேவைக்கேற்ப சுற்றுலா திட்டங்களை வகுப்பது, விழாக்கள் மற்றும் சுற்றுலா பொருட்காட்சிகளில் கலந்து கொள்வது குறித்தும் கலந்துரையாடினார்கள்.

இந்த நிகழ்வில் செக் தேசிய சுற்றுலா நிறுவனத்தின் சர்வதேச சந்தைப்படுத்தல் மற்றும் புதிய சந்தைகள் மேலாளர் திரு.மாரக் க்ரவ்டில் அவர்கள், செக் குடியரசின் சுற்றுலா ஏற்பாட்டாளர்கள் மற்றும் பயண முகவர்கள் சங்கத்தின் நிர்வாக இயக்குனர் திருமதி.கட்ரினா சாலோப்கோவா அவர்கள், செக் டிராவல் ஏஜென்சிகள் சங்கத்தின் நிர்வாக இயக்குனர், திரு. மைக்கேல் வெபர் அவர்கள், செக் குடியரசின் மண்டல மேம்பாட்டு அமைச்சகத்தின் சுற்றுலாத் துறையைச் சேர்ந்த திருமதி. ஹனா நெட்பால் அவர்கள் ஆகியோர் கலந்து கொண்டார்கள்.

பின்னர் சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை அரசு முதன்மைச் செயலாளர் டாக்டர். பி.சந்தரமோகன் இ.ஆ.ப., அவர்கள், சுற்றுலாத்துறை இயக்குநர் மற்றும் சுற்றுலா வளர்ச்சிக் கழக மேலாண்மை இயக்குநர் திரு.சந்தீப் நந்தூரி இ.ஆ.ப., அவர்கள் ஆகியோர் (13.03.2023) அன்று செக் குடியரசின் கலாச்சார அமைச்சகத்தின் நினைவுச்சின்ன பராமரிப்புத்துறை இயக்குநர் திரு. ஜிரி வாஜ்க்னர் அவர்கள் தலைமையிலான செக் குடியரசின் கலாச்சார அமைச்சகத்தின் சர்வதேச துறையின் தலைவர் திரு.பிடெர் ஃகின்ஸ்டோ அவர்கள், செக் குடியரசு கலாச்சார அமைசக்கத்தின் சர்வதேச வளர்ச்சிப்பிரிவைச் சேர்ந்த சூஸன்னா ஜாம்ட்லொவா ஆகியோர் அடங்கிய குழுவினரை சந்தித்து, தமிழ்நாட்டின் பண்பாடு, தொன்மை குறித்து தெரிவித்ததுடன், தமிழ்நாடு மற்றும் செக்குடியரசின் பல்கலைக்கழக கலைப்பிரிவுகளின் பயிற்றுநர்கள், மாணவர்கள் கொண்ட பயிற்சி பட்டறைகள் நடத்துவது குறித்தும், பண்பாட்டு பரிமாற்றம் செய்து கொள்வது, பாரம்பரியமிக்க திருவிழா நிகழ்ச்சிகளில் கலந்து கொள்வது, கலைநிகழ்ச்சிகள் நடத்துவது குறித்தும் கலந்துரையாடினார்கள்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**

அரசின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள :

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in